**தலைப்பு 222 – இலங்கை தரைப்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இலங்கை தரைப்படையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 222 – இலங்கை தரைப்படையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 29 ஆந் திகதி இலங்கை தரைபடைக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை தரைப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்திய மாக தயாரிக்கப் படாமை | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறை வேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.3.1(அ),(ஆ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | முகாமைத்துவப் பலவீனங்கள் | 2.9 |
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவு மற்றும் வினியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளகச் சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம் முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப் படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.11 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமை த்துவத்தில் குறைபாடுகள் | 2.5 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறை சேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படு வதாகவும் | 1. வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதமாக சமர்ப்பிக்கப்படல் | 2.1.1 |
| | | 2. கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடு கள் | 2.12 |
| | | 3. பாதீட்டு மதிப்பீடு நடை முறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்காமை | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற் பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல். | 2.11(அ) |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | நட்டங்களும் சேதங்களும் | 2.7(அ),(ஆ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை தரைப்படையினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை 2018 ஜூலை 31 திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2 நிலைபேறான அபிவிருத்தி

**நிலைபேறான குறிக்கோள்களை நெருங்குதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான இலங்கைத் தரைப் படையினால் செயற்பட வேண்டிய தனது நோக்கெல்லை கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக செயற்பட வேண்டிய முறை தொடர்பாக அறிந்திருந்தது. இலங்கைத் தரைப்படையினால் இனங்கண்டிருந்த ‘‘ஆரோக்கியமான மற்றும் நல்வாழ்வு’’ ஆகிய குறிக்கோள்களின் கீழ் தரவுகள் சேகரிக்கும் கருமத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு தேவையான பௌதீக வளங்கள் மேலும் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

### 2.3 பெறுகை செயன்முறையின் மூலம் வளங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

இலங்கைத் தரைப்படையினால் அரச பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட்டு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ரூபா 22,509.59 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 21,038.66 மில்லியன் ஏற்பாடுகளே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் காண்பிக்கப்படுகின்றன.

#### 2.3.1 பெறுகை செயன்முறையை செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் மாதம் மாலி அரசில் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படை கடமைகளுக்காக கடல் மார்க்கமாக பண்டங்கள் எடுத்துச் செல்வதற்காக 70 கண்டேனர்கள் கொள்கலன்கள் கொள்வனவு செய்வதற்காக இலங்கை தரைப்படையினால் ரூபா 30.53 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2016 செப்தெம்பர் 02 திகதி பண்டங்கள் வழங்குவதற்காக வழங்குனர் இனங்கியிருந்த போதிலும், உரிய கொள்கலன்கள் 2017 ஜனவரி 06 திகதி வழங்கப்பட்டிருந்தது. இதற்காக தாமதக் கட்டணம் ஆக ரூபா 3.19 மில்லியன் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் வழங்குனரின் கோரிக்கையின் பிரகாரம் அந்தப் பணத்தில் 50 சதவீதம் ஆகிய ரூபா 1.53 மில்லியன் மாத்திரம் அறவீடு செய்வதற்கு பெறுகை குழு தீர்மானித்திருந்தது.

(ஆ) இலங்கை தரைப்படையின் அனைத்து முகாம்களுக்கும் தேங்காய் வழங்குதல் ஒரு தனியார் கம்பனி ஒன்றிற்கு கடந்த பல வருட காலம் முதல் இடையறாமல் ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தது. தோல் அகற்றிய தேங்காய் 01 கிலோகிராமிற்காக உடன்பட்டிருந்த விலை ரூபா 39.20 முதல் ரூபா 41 தொகை வரையான வீச்சில்

காணப்பட்டதுடன், 2017 ஜூன் 16 திகதி பாதுகாப்பு அமைச்சு செயலாளரினால் அவ்வாறு உடன்பட்டிருந்த தொகை ரூபா 65 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஜூன் 22 திகதி முதல் 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் பச்சை தேங்காய் 1 கி.கிராம் ரூபா 65 வீதம் கி.கிராம் 6,078,355 தொகை கொள்வனவு செய்வதற்காக ரூபா 395.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இனங்கிய விலையினை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது.

## 2.4 செயற்படுத்தியிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது இலங்கை தரைப்படையினால் உள்நாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி செயற்படுத்தும் 04 செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 1,599.36 மில்லியன் ஏற்பாடுகளும் வெளிநாட்டு நிதியத்தினை பயன்படுத்தி செயற்படுத்தும் 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,510 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் முறையே ரூபா 1,590.66 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1,242.11 மில்லியன் தொகை ஆக ரூபா 2,832.77 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 276.59 மில்லியன் அதாவது ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் 8.89 சதவீதத்தினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 அலுவலகத்தை நடாத்துவதற்கான செலவுகள்

கொழும்பு நகரின் அபிவிருத்தி வேலைக்களுக்காக தரைப்படை தலைமையகம் அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களை விடுவிப்பதற்காக நேரிட்டிருந்தமையால் தரைப்படை தலைமையகத்தின் கிளைகள் மற்றும் பணிப்பாளர் சபையினை நடாத்துவதற்காக 2011 ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் கட்டிடங்கள் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை தரைப்படை நடவடிக்கை எடுத்திருந்தது. 2011 ஆண்டு முதல் கட்டிட வாடகையாக ரூபா 1,074.1 தொகை செலுத்தியிருந்ததுடன் அச் செலவுகளில் 2017 ஆண்டிற்கான வாடகை செலவு ரூபா 470.3 மில்லியனும் அடங்கியிருந்தது.

### 2.5.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

வேயங்கொடையில் அமைந்துள்ள இலங்கை தரைப்படைக்குச் சொந்தமான புடவை களஞ்சியத்தில் 3 ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த ரூபா 6.6 தொகை பெறுமதியான வெள்ளை கன்வஸ் 1,479 சப்பாத்து சோடிகள் விளைவற்று காணப்பட்டது.

### 2.5.3 களஞ்சிய மற்றும் களஞ்சிய நிர்வாகத்தில் பலவீனங்கள்

2011 ஆண்டு முதல் கம்பஹா மாவட்டத்தில் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமொன்றில் இலங்கை தரைப்படையின் ஆயுத களஞ்சியமொன்று நடாத்திச் செல்வதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அந்த களஞ்சியத்திற்காக பயன்படுத்தியிருந்த கட்டிடங்கள் அரசாங்க நெசவு நிலையமொன்றிற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இந்த விடயத்திற்காக அந்த கட்டிடங்களின் சாத்தியக்கூறுகள் பற்றி விசாரணை ஒன்று மேற்கொண்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. இந்த களஞ்சியம் புகையிரதப் பாதை, பொருளாதார நிலையம், மத்திய மஹா வித்தியாலயம் ஆகிய இடங்களுக்கு அண்மித்து இருந்த காரணத்தினால் பாதுகாப்பு தொடர்பாக காணப்படும் ஆபத்தினை கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது. ஆயுதங்களை வழங்கும் 2 நிறுவனங்களுக்குரிய தோட்டாக்கள் மற்றும் துப்பாக்கி ரவை பொறி 17,866,171 அலகுகள் குறிப்பிட்ட ஆயுதக் களஞ்சியத்தில் 2011 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**2.6 ஈடுபாட்டுப் பொறுப்பும் பொறுப்பும்**

**வருட பாதீட்டு எல்லையை மிகைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அனுகுதல்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 02(அ) இற்கு இணங்காமல் 14 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,742.02 இற்கான ஏற்பாடுகள் ரூபா 1,100.21 மில்லியனினால் மிகைத்து ரூபா 1,668.08 இற்கான ஈடுபாட்டு பொறுப்பு ஏற்படுத்தியிருந்தது.

**2.7 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 செப்தெம்பர் 25 திகதியில் உள்ளவாறு இலங்கை தரைப்படையின் 121 சம்பங்கள் தொடர்பாக ரூபா 13,133.19 மில்லியன் தொகை மேலும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு உரிய நட்டங்கள் சேதங்களாக இனங்கண்டிருந்தது. அவற்றில் 47 சம்பவங்கள் தொடர்பாக 10 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 497.70 மில்லியன் தொகை பெறுமதியான நட்டங்கள் மற்றும் சேதங்கள் அதில் அடங்கியிருந்தன.

(ஆ) 2106 ஜூன் மாதம் 05 ஆம் திகதி இலங்கைத் தரைப்படையின் ஸாலாவ முகாமில் அமைந்துள்ள ஆயுத களஞ்சியத்தில் ஏற்பட்ட வெடித்தலின் போது நட்டங்கள் மற்றும் பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்காக நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை நீதி மன்ற விடயங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அரச பணத்தை முதலீடு செய்து கொள்வனவு செய்திருந்த ஆயுதங்கள், வாகனங்கள், பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் அழிந்துள்ளமையால் ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 12,817.76 மில்லியன் தொகை என நிச்சயிக்கப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(4) நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் குறிப்பிட்ட அங்கீகாரத்தை பெற்றவுடன் நட்டங்கள் சேதங்களை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக கண்டறியப்பட்டது.

**2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை தரைப்படையினால் உண்மையான தேவையினை மிகைத்து பண்டங்கள் கொள்வனவு செய்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட. அதன் பிரகாரம் தேவையினை மிகைத்து 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது முறையே சப்பாத்து 18,348 சோடிகள், 33,184 சோடிகள் மற்றும் 28,121 தொகை தரைப் படையினர் கொள்வனவு செய்திருந்தனர்.

**2.9 முகாமைத்துவத் திறமையின்மை**

இலங்கைத் தரைப்படையினால் 25,800 ஸ்டம்ப் ஸொக்ஸ் (Stump Socks) கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அவற்றில் 10,100 சோடிகள் வேயங்கொடை புடவை களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. அதன் தர பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட் மாதிரியுடன் இணங்கியிருக்காத போதிலும் தேவையினை கவனத்தில் எடுத்து இருப்பில் சேர்ப்பதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்தது. மீதியாகவுள்ள 15,700 ஸ்டம்ப் ஸொக்ஸ் தொகை இருப்பு 70 சதவீதம் அங்கீகரிக்கப்பட்ட விவரக் குறிப்புடன் பொருந்துவதால் இருப்பிற்கு எடுப்பதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்தது.

**2.10 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் இலங்கை தரைப்படைக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 115,202.96 | 115,164.75 | 38.21 | 0.033 |
| | மூலதன | 7,427.37 | 7,365.15 | 62.22 | 0.838 |
| | **மொத்தம்** | **122,630.33** | **122,529.90** | **100.43** | **0.081** |
| 2014 | மீண்டுவரும் | 135,287.68 | 135,282.25 | 5.44 | 0.004 |
| | மூலதன | 9,588.29 | 7,504.00 | 2,084.29 | 21.737 |
| | **மொத்தம்** | **144,857.97** | **142,786.25** | **2,089.72** | **1.443** |
| 2015 | மீண்டுவரும் | 151,629.47 | 151,624.68 | 4.78 | 0.003 |
| | மூலதன | 8,185.43 | 6,726.65 | 1,458.77 | 17.821 |
| | **மொத்தம்** | **159,814.90** | **158,351.33** | **1,463.55** | **0.915** |
| 2016 | மீண்டுவரும் | 151,664.60 | 144,320.60 | 7,343.99 | 4.842 |
| | மூலதன | 8,731.75 | 3,805.83 | 4,925.92 | 56.414 |
| | **மொத்தம்** | **160,393.35** | **148,126.43** | **12,269.91** | **7.649** |
| 2017 | மீண்டுவரும் | 146,393.93 | 142,925.89 | 3,468.04 | 2.368 |
| | மூலதன | 11,772.05 | 9,529.58 | 2,242.,46 | 19.049 |
| | **மொத்தம்** | **158,165.98** | **152,455.47** | **5,710.50** | **3.610** |

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(i) ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

ஒரு செலவு விடயத்திற்கு ஒதுக்கியிருந்த ரூபா 24 மில்லியன் மொத்தத் தேறிய ஏற்பாடுகள் முற்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

**(ii) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் இருந்து வழங்கியிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

வேறு 03 அமைச்சுக்கள் மற்றும் 02 அலுவலகங்களினால் பல்வேறு கருமங்களுக்காக முறையே ரூபா 566.77 மில்லியன் தொகை மற்றும் ரூபா 700.96 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 1,267.73 மில்லியன் தொகை ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 1,030.75 மில்லியன் மாத்திரம்

பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பாடுகளில் இருந்த ரூபா 236.98 மில்லியன் தொகை அதாவது 18.69 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

இலங்கை தரைப்படைக்குரிய 22201 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3,300.00 | 3,299.87 | 2,540.00 | 2,540.86 | 4,542.00 | 2,240.85 |

**நிலுவை வீதவரி அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாயகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 78,220,340 தொகையாக இருந்ததுடன் அந்த நிலுவை கடன்மீதி 01 வருடம் முதல் 05 வருடங்களை விட மிகையான காலம் வரை காலவீச்சு முதல் காணப்பட்ட போதிலும், அந்தக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு இலங்கைத் தரைப்படைக்கு இயலாதுள்ளது.

### 2.12 கட்டுநிதிக் கணக்கு

இலங்கைத் தரைப்படையின் கீழ் காணப்படும் கட்டுநிதிக் கணக்கின் மீதி 2018 ஆகஸ்ட் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 40.29 மில்லியன் ஆகும். அம் மீதியில் 2008 மற்றும் 2011 ஆண்டுகள் முதல் காணப்பட்ட முறையே ரூபா 2.81 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2.64 மில்லியன் தொகைகளை இது வரை தீர்த்திருக்கவில்லை.

### 2.13 பொது வைப்புக் கணக்கு

இலங்கை தரைப் படையின் கீழ் காணப்படும் 6 வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 75.72 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் செல்லுபடியாகும் காலம் கடந்துள்ள வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும் 2018 ஆகஸ்ட் 31 திகதியில் உள்ளவாறு தீர்ப்பதற்கு காணப்பட்ட காலம் கடந்துள்ள வைப்புக்களின் பெறுமதி ரூபா 441,000 தொகையாக காணப்பட்டது.

**2.14 மனித வள முகாமைத்துவம்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட உள்ளவாறான மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணி விபரங்கள் கீழ் காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான இலங்கை தரைப்படையினால் ஆளுக்குரிய வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 116,824.87 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 640,789 ஆக இருந்தது.

இலங்கை தரைப்படையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவிகளின் எண்ணிக்கைகள் தொடர்பாக நிலைமை பின்வருமாறு

| பதவியணி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உத்தியோகத்தர்கள் - நிரந்தர/ சுயவிருப்பு | 10,656 | 9,290 | 1,366 |
| ஏனைய பதவிகள் - நிரந்தர/ சுயவிருப்பு | 189,853 | 162,589 | 27,264 |
| | 200,509 | 171,879 | 28,630 |

**இலங்கை தரைப்படையில் சேவையாற்றும் சிவில் பதவியணிகள்**

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | மூன்றாம் நிலை | 19 | 13 | 6 | - |
| (ii) | இரண்டாம் நிலை | 199 | 148 | 51 | - |
| (iii) | ஆரம்ப நிலை | 6,391 | 8,974 | - | 2,583 |
| (iv) | அமைய /ஒப்பந்த | 4,537 | 1,300 | 3,237 | - |
| | மொத்தம் | 11,146 | 10,435 | 3,294 | 2,583 |

ஆரம்ப நிலை மிகை பதவியணி ஆகிய 2,583 தொகைக்காக நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் டீஎம்எஸ்/08/21 இலக்க மற்றும் 2009 நவம்பர் 30 திகதிய கடிதத்தின் மூலம் பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக மற்றும் மிகை ஊழியர் அடிப்படையில் நிரந்தரப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.